(ஔ) தமிழ்நாடு திருமணங்களை பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களை பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2017), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களை பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே நான் எதிர்த்திருக்கும் நிலையில், தற்போது ஒரேயொரு கருத்தை மட்டும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். இஸ்லாமிய திருமணங்கள் அனைத்தும் நபிகள் நாயகம் அவர்கள் காலந்தொட்டு ஷரியத்தினுடைய அடிப்படையிலே, 1400 வருடங்களுக்கு மேலாக உரிய சாட்சிகளோடு பள்ளிவாசல்களில், அரசு காஜிக்கள், பள்ளி இமாம்கள் மூலமாக பதிவு செய்யப்பட்டு, உரிய முறையிலே பாதுகாக்கப்பட்டு வருகின்றது. எனவே, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் திருத்தச் சட்டத்திலும் மேற்படி அந்தப் பதிவுகளையே நீங்கள் ஏற்று, அந்த மணமக்கள் எல்லாம் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று, அங்கே நடைமுறையிலே சந்திக்கின்ற பிரச்சினைகளுக்கெல்லாம் விதிவிலக்கு கொடுக்கின்ற வகையிலே, இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டக்கூடிய வகையிலே, இந்தப் பதிவு முறையையே தமிழ்நாடு

@ 29–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 2—40

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண கட்டாய பதிவு சட்டம் கடந்த தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத் திருத்தம் உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 150 நாட்களுக்குள்ளே திருமணம் செய்தவர்கள் பதிவு செய்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல; திருமணம் செய்தவர்கள் பதிவாளர் முன்பு நேரடியாக வந்தால்தான் திருமணம் பதிவு செய்யப்படும். குறிப்பிட்ட காரணங்களைப் பதிவு செய்த பிறகு, அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்பதுதான் அந்தச் சட்டத் திருத்தம். மற்றொன்று அனைத்து மதங்களின் மதகுருவை, திருமணம் செய்து வைப்பவர் என்று குறிப்பிடுகின்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படிதான், சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. 150 நாட்களுக்கு மேல் ஆகியிருந்தாலும், 1,000 ரூபாய் கட்டணத்தோடு அந்தத் திருமணங்களைப் பதிவு செய்துகொள்ளலாம். அதேபோன்று, குறிப்பிட்ட காரணங்களைப் பதிவு செய்த பிறகு, பதிவாளர் அவர்கள் அந்த திருமணம் செய்துகொண்ட நபர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கலாம். மற்றவர்கள் பதிவாளர் முன்பு நேரடியாக வந்தால்தான் அந்த திருமணங்கள் பதிவு செய்யப்படும். அதேபோன்று, மதகுரு என்பது திருத்தப்பட்டு, 'திருமணங்களை செய்து வைப்பவர் அல்லது திருமணங்களை முடித்து வைப்பவர்' என்று இப்போது திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, காஜிக்கள் திருமணங்களைப் பதிவு செய்கின்ற வழக்கம் இஸ்லாமிய மதத்திலே இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக்கூட தெரியும். அதுசம்பந்தமாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தற்போது அவர் குறிப்பிட்டிருந்த ஒரு வழக்கு விசாரணைக்கு வந்து, அப்படிப்பட்ட பதிவுகளைப் பதிவு செய்ய, சட்டத்தில் இடமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூலை 19]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களை பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஅ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2017), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 11–7–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.